ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2512/41 - 2026 ඔක්තෝබර් මස 30 වැනි සිකුරාදා - 2026.10.30

2512/41 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (I) - பொது

அரசாங்க அறிவித்தல்கள்

2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டம்

10 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள கட்டளை

2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவினால் தேசிய அனர்த்த முகாமைத்துவ சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரமும், 2026 யூன் 13ஆம் திகதிய அப/26/1247/803/038 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அனுமதியைக் கருத்திற்கொண்டும், அமைச்சுக்கள், அரசாங்க திணைக்களங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் என்பன நிறுவன அனர்த்த முகாமைத்துவத் திட்டமொன்றைத் தயாரித்து அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்குச் சமர்ப்பிப்பது தொடர்பில் பின்வரும் கட்டளைகள் பிறப்பிக்கப்படுகின்றன:-

1. இக்கட்டளையானது "நிறுவன அனர்த்த முகாமைத்துவத் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பான கட்டளை, இல. 01 / 2026" என அழைக்கப்படும்.

2. ஒவ்வொரு அமைச்சும், அரசாங்க திணைக்களமும் மற்றும் அரச கூட்டுத்தாபனமும், தனது நிறுவனம் தொடர்பில் ஏற்பட்டுள்ள அல்லது ஏற்படக்கூடிய ஏதேனும் அனர்த்தம் அல்லது அண்மையில் ஏற்படவுள்ள அனர்த்த நிலைமைக்கு முகம்கொடுப்பதற்காக முன்ஆயத்தத்துடன் இருப்பதற்கான நிறுவன அனர்த்த முகாமைத்துவத் திட்டம் (Institutional Disaster Management Plan) ஒன்றைத் தயாரிக்க வேண்டும்.

1A - G 48420 - 04 (2026/10)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. 2 ஆம் பந்தியின் கீழ் தயாரிக்கப்படும் நிறுவன அனர்த்த முகாமைத்துவத் திட்டமானது, தேசிய அனர்த்த முகாமைத்துவத் திட்டமான National Disaster Management Plan (NDMP) இன் அடிப்படையிலும் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் வெளியிடப்படும் தொடர்புடைய வழிகாட்டல்களுக்கு இணங்கவும் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

4. நிறுவன அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தைத் தயாரிக்கும்போது, குறிப்பிட்ட நிறுவனத்தின் பணிகள், பொறுப்புக்கள், அனர்த்த அபாயங்கள், அபாயத்திற்குள்ளாகக்கூடிய காரணிகள் மற்றும் அவசியமான சேவைகள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, அனர்த்த அபாயங்களை இனங்காணல் மற்றும் மதிப்பீடு செய்தல், அனர்த்தங்களைத் தடுத்தல் மற்றும் அபாயத்தைக் குறைத்தல், முன்னாயத்தம், அவசரகாலப் பிரதிபதிலிருப்பு, அத்தியாவசிய சேவைகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்தல், வள முகாமைத்துவம், நிவாரணங்கள், வழமைக்கு திரும்புதல், புனர்வாழ்வளிப்பு மற்றும் புனரமைப்பு மற்றும் திட்டத்தை மீளாய்வு செய்தல் மற்றும் புதுப்பித்தல் தொடர்பில் அவசியமான ஏற்பாடுகள் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

5. 4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவன அனர்த்த முகாமைத்துவத் திட்டமானது, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் வெளியிடப்பட்டுள்ள "Institutional Disaster Management Plan - Guidelines for Preparation - For All Ministries, Government Institutions, Departments and Agencies" என்னும் வழிகாட்டலுக்கு இணங்கத் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

6. ஒவ்வொரு அமைச்சும், அரசாங்க திணைக்களமும் மற்றும் அரச கூட்டுத்தாபனமும், இக்கட்டளை வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நாளிலிருந்து மூன்று மாத காலப்பகுதிக்குள், தமது நிறுவன அனர்த்த முகாமைத்துவ திட்டத்தினைத் தயாரித்து, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

7. ஒவ்வொரு அமைச்சின் செயலாளரும், ஒவ்வொரு அரசாங்கத் திணைக்களத்தின் தலைவரும் மற்றும் ஒவ்வொரு அரச கூட்டுத்தாபனத்தினதும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் அல்லது நிறுவனத் தலைவரும், தமது நிறுவனத்தின் நிறுவன அனர்த்த முகாமைத்துவத் திட்டமானது இக்கட்டளைக்கு இணங்கத் தயாரிக்கப்பட்டு, குறிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்குச் சமர்ப்பிக்கப்படுவதை உறுதிசெய்தல் வேண்டும்.

8. இக்கட்டளையின் கீழ் கிடைக்கப்பெறும் நிறுவன அனர்த்த முகாமைத்துவத் திட்டங்களை, 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் பிரகாரம், அனர்த்த முகாமைத்துவ நிலையமானது, தேசிய அனர்த்த முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பித்தல் வேண்டும்.

9. ஒவ்வொரு அமைச்சும், அரசாங்கத் திணைக்களமும் மற்றும் அரச கூட்டுத்தாபனமும், தமது நிறுவனத்தின் அனர்த்த முகாமைத்துவ திட்டத்தை, நிறுவனத்தின் பணிகள், அனர்த்த அபாயம், நிறுவனக் கட்டமைப்பு அல்லது செயற்பாட்டு நடைமுறைகளில் ஏதேனும் மாற்றம் ஏற்படும் சந்தர்ப்பங்களிலும் மற்றும் நிறுவனத்திற்கு அவசியமெனத் தோன்றும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும், தேவைக்கேற்ப மீளாய்வு செய்து புதுப்பித்தல் வேண்டும். அவ்வாறு புதுப்பிக்கப்பட்ட பிரதியொன்றினை அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

10. இக்கட்டளையை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப வழிகாட்டல்கள் மற்றும் உதவிகளை அனர்த்த முகாமைத்துவ நிலையமானது, உரிய அமைச்சுக்கள், அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களுக்கு வழங்க முடியும்.

இக்கட்டளையானது, அனர்த்த முகாமைத்துவத்திற்கான தேசிய சபையின் உடன்பாட்டின் பிரகாரம் 2026 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 29 ஆம் திகதி கொழும்பில் நிறைவேற்றப்பட்டது.

எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா (ஓய்வுபெற்ற)
டபிள்யுடபிள்யு,ஆர்டபிள்யுபி//, ஆர்எஸ்பீ/, யுஎஸ்பி,
எவ்என்டீயு (சீனா), பீஎஸ்சீ
செயலாளர்
பாதுகாப்பு அமைச்சு
செயலாளர், அனர்த்த முகாமைத்துவம் பற்றிய தேசிய சபை.

EOG 10 - 0369